JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No. 8/2019 Date:15.06.2023 P.W.

| | | |
|---|---|---|
| பெயர் | ° | டாக்டர். திரு. ஜி.மோகனன் |
| தந்தை பெயர், க/பெ | ° | குருசாமி |
| முகவரி | ° | |
| கிராமம் | ° | |
| மாவட்டம் | ° | |
| ஜாதி | ° | |
| தொழில் | ° | |
| மதம் | ° | |
| வயது | ° | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 15th day of June 2023.

எதிரி ஆஜரில் உள்ளார்.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது முன்னாள் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறையில் பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 22.12.2015ம் தேதி மாலை 7.30 மணிக்கு பெரியார் நகர் காவனூர் பாக்கம் அந்த இடத்தில் திருமதி.சாந்திமேரி என்பவர் மருத்துவம் பார்ப்பதாக தகவல் கிடைத்து நான் சம்பவயிடத்திற்கு சென்று சோதனை செய்த போது அம்மையாரின் கிளினிக்கில் சோதனை செய்த போது சுரேஷ் என்பவருக்கு குளுக்கோஸ் ஏற்றிக்கொண்டுயிருந்தார். சுரேஷ் என்பவரின் கையில் மருத்துவம் பார்த்த சீட்டு இருந்தது. மேற்படி எதிரியை பார்த்து நீங்கள் மருத்துவம் பார்ப்பதற்கு என்ன சான்றிதழ்கள் வைத்தியிருக்கிறீர்கள் அவரிடம் கேட்ட போது அதற்கு அவர் தான் 12ஆம் வகுப்பு வரை தான் படித்துள்ளதாக கூறினார்.

2. அதன்பின்பு அவருடைய கிளினிக்கில் கீழ்கண்ட பொருட்களை பறிமுதல் செய்தோம். அதனை வரிசைபடுத்தி ஸ்டெடஸ்கோப், டார்ச் லைட், கத்திரிக்கோல், போர்சப்ஸ், டிஸ்போஸ்சபல் சிரஜிபாக்ஸ், மேலும் உபயோகப்படுத்தாத டிஸ்போஸ்சபல் சிரஜியஸ் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட டிஸ்போஸ்சபல் சிரஜியஸ், அயோடிக்ஸ் சொலிசியன்ஸ், ஊசி, பி12 இன்ஜக்சன்ஸ், சைனோ கோபாலமைன் இன்ஜக்சன்ஸ், ஆகியவற்றை அவரிடமிருந்து பறிமுதல் செய்து முத்தாப்புதுபேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு புகார் அளிக்கப்பட்டது. மேற்படி பொருட்கள் முறையே **சாபொ. 1 முதல 13.** நான் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். தமிழ்நாடு மெடிக்கல் கவன்சிலிங் மேற்படி எதிரி பதிவு செய்யவில்லை, மேலும் அவர் அலோபதி பிராக்டீஸ் செய்யக்கூடாது என்ற சான்றிதழ் வாங்கினோம். பாலாஜி கிளினிக்கிலிருந்து கைப்பற்றப்பட்ட மருத்துவபொருட்களின் பட்டியல் **அ.த.சா.ஆ.2** ஆகும்.

3. எதிரி சுரேஷ் என்பவருக்கு சிகிச்சை பார்த்த மருத்துவ சீட்டு **அ.த.சா.ஆ.3** ஆகும். நோயாளி சுரேஷ் என்பவருக்கு எதிரி சிகிச்சை அளித்தார் என்பதற்கு அவரே கடிதம் எழுதி கொடுத்தார். நோயாளி சுரேஷிற்கு எதிரி காய்ச்சல் இருந்ததாக குளுக்கோஸ் போட்டு ஊசி போட்டுள்ளார். நானும் என்னுடன் சேர்ந்து ஏர்னஸ் சுதாகர் உதவியாளர், முத்துபாரதி உதவியாளர், சாந்திமேரி ஆகியோர் முன்னிலையில் மேற்படி பொருட்களை கைப்பற்றி காவல் துறையிடம் ஒப்படைத்தோம். அவர் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

4. ஸ்ரீ சக்தி மெடிக்கல் என்ற பிரிஸ்கிரிப்ஸ் பேடில் எதிரியின் பெயர் மற்றும் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். சாபொ.1 முதல் 13 ஆகியவை பொது மார்க்கெட்டில் கிடைக்கும் என்றால் இன்ஜக்சன்ஸ் மற்றும் அதற்கான மருந்து பொருட்களை தவிர மற்றவை கிடைக்கும். சம்பவத்தின் போது எத்தனை இடத்திற்கு சோதனைக்காக சென்றோம் என்றால் 2 இடத்திற்கு சென்றோம். 2வது இடம் அவருடைய பெயர் மற்றும் கிளினிக்கின் பெயர் என்னவென்றால் என்றால் சொல்ல இயலாது. 2வது இடத்திலிருந்த நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2வது இடத்தை தான் 1வதாக சோதனை செய்தோம் என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் எதிரியின் கிளினிக்கிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இடைவெளி இருக்கும்.

5. மேற்படி 2 இடத்திற்கு மட்டும் தான் நாங்கள் சோதனைக்கு சென்றோம் என்றால் சரிதான். முத்தாப்புதுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று போலீசாரையும் சோதனைக்கு உடன் அழைத்து சென்றோம் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு அழைத்து சென்றோம் என்றால் 6.30 மணிக்கு அழைத்து சென்றோம். எத்தனை மணிக்கு சம்பவயிடத்தை சோதனை செய்தோம் என்றால் 7.30 மணியளவில் சோதனை செய்தோம். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். கையொப்பம் மட்டும் தான் செய்தேன். புகாரை எழுதியவர் புகாரில் கையொப்பம் இடவில்லை. நான் சொன்னதை புகாரில் எழுதப்பட்டு என்னிடம் காட்டப்பட்டு நான் கையெழுத்து செய்தேன். நான் சொன்னப்படி புகார் எழுதப்பட்டுள்ளது என்று வாசகம் உள்ளதா என்றால் இல்லை. அதசாஆ.1 புகாரில் சோதனை குழு அமைத்து மருத்துவ ஆய்வாளர்களையும் உடன் அழைத்து சென்றேன் என்று புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

6. போலீசாரை சோதனைக்கு அழைத்து செல்வதற்கு நான் ஏதேனும் எழுத்து மூலமாக தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை, போன் மூலமாக தகவல் கொடுத்தேன். ஆய்வு செய்வதற்கு முன்பாக நான் முத்தாப்புதுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். எதிரியை விசாரித்து வாக்குமூலம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. பார்வை மகஜரை நான் தயார் செய்யவில்லை. போலி மருத்துவர்கள் சம்மந்தமாக ஆய்விற்கு செல்லும்போது சம்பவயிடத்தில் வைத்து பார்வை மகஜர் ஏதேனும் தயார் செய்தது உண்டா என்றால் நான் தனிப்பட்ட முறையில் பார்வை மகஜர் எதுவும் தயார் செய்தது இல்லை. என்னுடைய புகாரில் சம்பவயிடத்தில் போட்டோ எடுத்ததாகவோ வீடியோ எடுத்ததாகவோ கூறினேனா என்றால் இல்லை.

7. போலீசார் என்னுடன் சோதனைக்கு வந்ததது சம்மந்தமாகவோ செல்போனில் புகைப்படம் எடுத்தது சம்மந்தமாகவோ நான் புகாரிலோ விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் நான் தயார் செய்யாததால் புள்ளிவிவரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட மருந்துகளை எவ்வாறு வாங்கியதற்கான ரசீதுகள் ஏதும் நான் கைப்பற்றி போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த போலீசார் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நான் தான் கைப்பற்றினேன் போலீசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மருந்துகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தபோது இது சம்மந்தமாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடமானது பஜார் பகுதி என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

8. அக்கம் பக்கத்தில் வீடுகள் இருந்ததா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அக்கம் பக்கத்தில் இருக்கும் தனி நபர்களை அழைத்து மேற்படி மருந்து பொருட்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. புகாரில் நோயாளிகள் யாரேனும் எதிரியிடம் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் புகாரில் கூறவில்லை. எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதன் மீது பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. 50 அடி தூரத்தில் வேறு ஒரு கிளினிக்கை

ஆய்வு செய்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரிந்த விவரங்கள் தான் ஏர்னஸ் சுதாகர் மற்றும் முத்துபாரதி ஆகியோர்களுக்கு தெரியும் என்றாலும் மற்ற விவரங்கள் ஏதும் தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

//Judicial Magistrate,
Ambattur